ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

25.11.2015 - மலர் 12, இதழ் 39

## அமெரிகோவின் பெயரே 'அமெரிக்கா' ஆகியது



## வாழ்க்கையில் வெற்றி பெற...






## செவ்வாய் சென்றால் நேரிடும் சவால்கள்



## முத்துராஜவல சரணாலயம்



விலை ரூபா 15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தில் (✓) அடையாளமிடுக.

1. 

- ◯ சிலந்தியொன்று மீன் வலையில் அகப்பட்டுள்ளது.
- ◯ சிலந்தியொன்று தனது இரைக்காக வலையில் காத்திருக்கின்றது.
- ◯ சிலந்தி வலையில் பூச்சியொன்று அகப்பட்டுள்ளது.

2. 

- ◯ சிங்கக்கூட்டில் ஒரு சிங்கம்.
- ◯ சிங்கக்கூட்டில் ஒரு நரி.
- ◯ காட்டில் ஒரு சிங்கம்.

3. 

- ◯ நாற்காலியின் கீழே ஒரு பட்டம்.
- ◯ நாற்காலிக்கு அருகில் ஒரு பட்டம்.
- ◯ நாற்காலியின் மீது ஒரு பட்டம்.

4. 

- ◯ சுவரில் நாட்காட்டி தொங்கவிடப்பட்டுள்ளது.
- ◯ சுவரில் மணிக்கூடு உள்ளது.
- ◯ நாட்காட்டி கீழே விழுந்துள்ளது.




1. நாம் அனைவரும் ............................ (கெட்ட/ நல்ல) நண்பர்கள்.
2. நண்பர்கள் நாங்கள் ............................ (தனித்தனியாக/ ஒன்றாகச் சேர்ந்து) பாடசாலை செல்வோம்.

## நண்பர்கள்




3. நாம் ஒரே ............................ (பாடசாலையில்/ வீட்டில்) கல்வி கற்கின்றோம்.
4. ............................ (அவன்/ நாம்) ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

## ஐஸ் கோன்களில் வழங்கப்பட்டுள்ள சொற்களை பொருத்தமான முறையில் வகைப்படுத்துக.




| | | |
|---|---|---|
| மாதங்கள் | | |
| | குளிர்பானம் | |
| | | சிவப்பு |
| | | |



1. இந்த வீட்டின் மேல் மாடியில் இருக்கும் பகுதிகளைக் குறிப்பிடுக.

   ..............................................................................

2. அக்காவும் தம்பியும் சமையல் செய்கின்றனர். சமையலறை எங்கே உள்ளது?

   ..............................................................................

3. வீட்டின் மேல் மாடிக்கு எவ்வாறு செல்லலாம்?

   1. ஏணியில் ஏறி 2. உயரே பாய்ந்து 3. படிகளில் ஏறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.






# ராட்சத விண்கல் மோதலிலிருந்து பூமியைப் பாதுகாக்க புதிய திட்டம்

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பாரிய விண்கல் ஒன்று பூமிக்கு மிக அருகாமையில் பயணித்திருந்தது. இந்த விண்கல்லின் பயணப்பாதை தசமப் புள்ளியில் மாறுபட்டிருக்குமாயின், அது பூமியில் மோதிப் பாரிய பேரழிவு ஒன்று நிகழ்ந்திருக்கும் என்று வானியல் விஞ்ஞானிகள்




எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், விரைவில் மற்றுமொரு விண்கல் பூமியுடன் மோதும் ஆபத்து உள்ளதாகவும், இந்த மோதல் நிகழ்ந்தால் அதுவே உலக முடிவாக அமையக் கூடும் எனவும் சில தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆக, அந்த விண்கல் பூமியுடன் மோதுவதற்கான வாய்ப்பு இருக்குமாயின், அதிலிருந்து பூமியைக் காப்பாற்றுவது எவ்வாறு? என்பது குறித்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய விஞ்ஞானிகள் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 2032 இல் உலக அழிவு...?

2032 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் திகதி உலக அழிவு நிகழும் என்று யுக்ரேன் வானியல் விஞ்ஞானிகள் சிலர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த தினத்தில் ராட்சத விண்கல் ஒன்று பூமியுடன் மோதும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். யுக்ரேனின் க்றிமியன் விண்வெளி பௌதீக விஞ்ஞான கண்காணிப்பு நிலைய விஞ்ஞானிகளால் அண்மையில் இந்த ராட்சத விண்கல் அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கு '$2013TV_{135}$' என்று அவர்கள் பெயரிட்டுள்ளனர். இந்த விண்கல்லின் பயணப்பாதை எவ்வாறு அமைந்துள்ளது



© PA

என்பதை கணிப்பிடும்போது, அது 2032 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் பூமியை நோக்கி வரும் என்றும், 26 ஆம் திகதி பூமியுடன் மோதும் என்றும் தெரிய வந்துள்ளது.

## அணுகுண்டு வெடிப்புக்கு சமம்

குறித்த விண்கல் பூமியுடன் மோதுமேயானால், அந்த மோதலானது 2500 மெகா தொன் அளவு அணுகுண்டுகள் ஒரே தடவையில் வெடித்துச் சிதறுவதற்கு ஒப்பானது என்றும், அவ்வாறு நிகழும் பட்சத்தில் அதுவே உலக முடிவாக அமையும் என்றும் யுக்ரேன் விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பூமியைக் காப்பாற்றல்

எனவே அமெரிக்க- ஐரோப்பிய கூட்டு நிறுவனமான 'அயிடா' நிறுவனம், இந்த பாரிய விண்கல் மோதலிலிருந்து பூமியினை பாதுகாக்கும் திட்டத்தை தயாரித்துள்ளது. விண்கற்களிலிருந்து பாதுகாப்பு பெறல் மற்றும் அதன் பயணப்பாதையினை மாற்றுதல் என்பனவே இந்த திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்காக ரொபோ விமானமொன்றை தயார்படுத்தி, அதனை விண்கல்லில் தரையிறங்கவைத்து, அங்கேயே வெடிக்கச் செய்தல் அல்லது விமானத்தின் மூலம் அழுத்தத்தினை ஏற்படுத்தி விண்கல்லின் பயணப்பாதையினை மாற்றுதல் என்பன தொடர்பில் அயிடா



நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

## பரீட்சார்த்த முயற்சி

2020 ஆம் ஆண்டில் இந்த முயற்சி பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளது. இதற்கென பிரபஞ்ச வெளியில் சுழன்றுகொண்டிருக்கும் 'டிடிமூன்' (Didymoon) என்ற விண்கல்லினை விஞ்ஞானிகள் தெரிவுசெய்துள்ளனர். இதன் விட்டம் 160 மீற்றராகும். இந்த விண்கல்லில் இரண்டு ரொபோ விமானங்களை தரையிறக்குவதற்கு அயிடா நிறுவனம் தற்போதளவில் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய, 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் இந்த பரீட்சார்த்த முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டில் ஒரு பாலம்

ஒரு ஊரில் பெரிய காடு ஒன்று இருந்தது. அந்தக் காட்டின் நடுவே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. மழைக்காலத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது, விலங்குகள் அந்த ஆற்றைக் கடக்க முடியாமல் கஷ்டப்பட்டன. எனவே, எல்லா விலங்குகளும் ஒன்றுசேர்ந்து, ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்ட முடிவுசெய்தன.

"அதை எப்படிச் செய்யப்போகிறோம்?" என்று கேட்டது கரடி. தீவிரமாக யோசித்த புலி "பாலம் கட்ட நிறைய மரங்கள், கற்கள் தேவை. எல்லா விலங்குகளும் மரக்கட்டைகளைக் கொண்டுவந்தால் வேலையை சுலபமாக முடிக்கலாம்" என்றது. "நீர் கூறுவதும் சரிதான் இந்தப் பொறுப்பை யானையிடமே ஒப்படைக்கின்றேன். எல்லோரும் இன்றிலிருந்து யானை என்ன சொல்கிறாரோ, அதன்படி செய்யவேண்டும்" என்று கட்டளையிட்டது சிங்கம்.

**"இரண்டு நாட்களாக நான் சுகவீனமுற்று இருந்தேன். என்னால் கல்லையும் மரக்கட்டையையும் சேகரிக்க முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு கடைசி நாள் என்பதால் மரக்கட்டை வெட்ட வந்திருக்கிறேன்" என்றபடி ஒரு கருவேலம் கிளையைப் பார்த்து வெட்டத் தொடங்கியது குரங்கு.**



யானையும் எழுந்து மிடுக்காக எல்லோரையும் பார்த்து "இன்றில் இருந்து ஒவ்வொரு விலங்கும் ஒரு மரக்கட்டையும் ஒரு கல்லும் கொண்டுவந்து ஆற்றோரம் போடவேண்டும். தேவையான கற்களும் கட்டைகளும் சேர்ந்ததும் பாலத்தைக் கட்டலாம். இன்றிலிருந்து மூன்று நாட்களுக்குள் கற்களையும், கட்டைகளையும் கொண்டுவந்து போட்டுவிட்டு கையெழுத்துப் போடவேண்டும். இந்த வேலையைச் செய்யாதவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்" என்றது. இதைச் சிங்கமும் ஆமோதிக்க, கூட்டம் கலைந்தது.

இந்தத் தீர்மானம் சோம்பேறி நரிக்கு மட்டும் பிடிக்கவேயில்லை. 'யார் கல்லையும், கட்டையையும் சுமப்பது? இன்னும் மூன்று நாட்கள் இருக்கிறதே... பார்த்துக்கொள்ளலாம்' என்று அசட்டையாக இருந்தது.

முதல்நாளே காட்டில் உள்ள பாதி விலங்குகள் கட்டைகளையும் கற்களையும் கொண்டுவந்து அடுக்கிவிட்டன. யானையும் கவனமாக அவற்றிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டது. இரண்டாம் நாள் ஆற்றங்கரையில் கற்களும், கட்டைகளும் மலைபோல் குவிந்தன.

மூன்றாம் நாள், நரி என்ன செய்வதென்று யோசனையோடு மரத்தடியில் அமர்ந்திருந்தபோது, வயதான மான் ஒன்று சிரமப்பட்டு கல்லைத் தூக்கிக்கொண்டு போவதைப் பார்த்தது. அப்போது, அங்கே ஒரு குரங்கு கையில் கத்தியுடன் வருவதைப் பார்த்து "ஏய்... இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டது நரி. "இரண்டு நாட்களாக நான் சுகவீனமுற்று இருந்தேன். என்னால் கல்லையும் மரக்கட்டையையும் சேகரிக்க முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு கடைசி நாள் என்பதால் மரக்கட்டை வெட்ட வந்திருக்கிறேன்" என்றபடி ஒரு கருவேலம் கிளையைப் பார்த்து வெட்டத் தொடங்கியது குரங்கு.

"அனைவருமே கற்களையும் மரக்கட்டைகளையும் கொடுத்துவிட்டார்களா?" என்று சந்தேகத்துடன் கேட்டது நரி. இன்னும் இரண்டு பேர்தான் கொண்டுவரவில்லை என்று யானை கூறியதாகச் சொன்னது குரங்கு. குரங்கு சொன்னதின்படி, நரிக்கு அந்த இன்னொரு நபர் தான்தான் என்று தெளிவாகப் புரிந்துவிட்டது. கிளையை வெட்டி, வசதியான கட்டையாக செதுக்கிப் போட்ட குரங்கு, பிறகு எங்கிருந்தோ ஒரு கல்லையும் புரட்டிவந்து, அருகே போட்டுவிட்டுக் களைப்புடன் கல்லின்மீது உட்கார்ந்துகொண்டது.

"மிகவும் களைத்திருந்த குரங்கைப் பார்த்து கொஞ்சநேரம் படுத்து ஓய்வெடுத்துக்கொள்" என்று பரிவோடு சொன்னது நரி.

"வேண்டாம்... இதையெல்லாம் யானையிடம் கொண்டுசென்று சேர்க்கவேண்டும்" என்றது குரங்கு.

"அட... இதை நான் செய்ய மாட்டேனா? நீ ஓய்வெடு. நான் யானையிடம் இவை இரண்டையும் ஒப்படைக்கிறேன். நீ பொறுமையாக வந்து கையெழுத்துப் போடு" என்ற நரி "சரி, நான் கல்லைத் தூக்கிக் கொண்டு போகிறேன். திரும்பி வரும் வரைக்கும் ஓய்வெடு" என்ற நரி கல்லை எடுத்துச் சென்றுவிட்டது. குரங்கும் படுத்து அசதியில் உடனே தூங்கியும் விட்டது. நரி யானையிடம் சென்று கல்லைப் போட்டது.

"அப்பாடா... யானையாரே, நோட்டைக்கொடு கையெழுத்துப் போடுகிறேன்" என்றது.

"கட்டையையும் கொண்டுவா, பிறகு போடலாம்" என்றது யானை.

மீண்டும் திரும்பிய நரி தூங்கிக்கொண்டிருந்த குரங்கை தொந்தரவு செய்யாமல், கட்டையை தூக்கிக்கொண்டு மிகவும் சிரமத்துடன் நடந்து சென்றது. "ச்சே... சின்னக் கட்டையாக வெட்டியிருக்கக் கூடாதா அந்தக் குரங்கு' என்று முணுமுணுத்தவாறு மீண்டும் யானையிடம் வந்தது.

"என் வேலை முடிந்துவிட்டது. நோட்டைத் தாருங்கள் கையெழுத்து இட வேண்டும்" என்றது நரி. "இன்னும் அந்தக் குரங்கு மட்டும்தான் பாக்கி" என்று கூறிய யானையிடம் "அட... நான் கஷ்டப்பட்டு மரம் வெட்டிக் கொண்டுவந்திருக் கிறேன். அந்தக் குரங்கு மரத்தடி யில் நன்றாகத் தூங்குகின்றது" என்று நோட்டைக் கொடுத்தது நரி.

"அப்படியா? நாளைக்கு சிங்கத்திடம் சொல்கிறேன்" என்றது யானை.

மறுநாள் காலை எல்லா விலங்குகளும் ஒன்றுசேர்ந்தன. "எல்லோரும் சரியாக வேலை செய்தார்களா? யாராவது வேலை செய்யாமல் இருக்கிறார்களா?" என்று சிங்கம் விசாரித்தது. நோட்டை எடுத்துக்கொடுத்து, "நரியைத் தவிர எல்லோருடைய பெயர்களும் இதில் இருக்கின்றன" என்றது யானை. நரிக்கோ தலையில் இடி விழுந்தாற்போல் ஆகிவிட்டது. "என்ன உளறுகிறீர்கள் யானையாரே? நன்றாகப் பாருங்கள். கடைசியாக என் பெயர்தான் இருக்கும்" என்று நரி படபடத்தது.

"நீயே பார்... குரங்குதான் கடைசியாக கையெழுத்திட்டிருக்கிறது" என்று நோட்டைக் காட்டியது யானை. அதைப் பார்த்த நரிக்கு உலகமே சுற்றியது. குரங்கின் நினைவாகவே இருந்த நரி, தன் கையால் நோட்டுப் புத்தகத்தில் குரங்கு என்று எழுதியிருந்தது.

"யானையாரே... நீங்கள்தான் பார்த்தீர்களே. நான் கல்லும் கட்டையும் கொண்டுவந்து போட்டேனே" என்று அழாத குறையாகச் சொன்னது நரி.

"இதென்ன குழப்பம்? யானையே... உண்மையிலேயே கல்லும் கட்டையும் கொண்டுவந்து போட்டது யார்?" என்று கர்ஜித்தது சிங்கம்.

"தலைவரே... கொண்டுவந்தது நரி என்றே வைத்துக்கொண்டாலும் அதைக் கஷ்டப்பட்டுச் சேர்த்தது குரங்குதான்" என்றது யானை.

"ஐயோ! நான்தான் கொண்டுவந்தேன்... நம்புங்கள்" என்று நரி மீண்டும் பதறியது.

"அப்படியென்றால் நீ கொண்டுவந்த கல்லும் கட்டையும் நீ போட்ட இடத்திலேயே இருக்கிறது. அதை எடுத்துக் காட்டு" என்றது யானை. நரிக்குத் தலை சுற்றியது. 'இந்தக் குவியலில் எப்படி அதைக் கண்டுபிடிப்பது? எல்லாக் கல்லும் ஒரே மாதிரி இருக்கே' என்று தடுமாறியது. அதைக் கண்ட குரங்கு முன்னால் வந்து, "தலைவரே, நான் எடுக்கிறேன். இதே வெள்ளைக் கல் பாறை. ஒரு மூலையில் உடைந்திருக்கிறது. இதைக் குன்றின்மேலிருந்து எடுத்தேன். இதோ, நான் வெட்டின மரக்கட்டை. கருவேல மரத்தில் இருந்து வெட்டினேன். கட்டையில் குரங்கு என்று பெயர் வெட்டியிருக்கேன் பாருங்கள். உதவி செய்கிறேன் என்று கூறி என்னை ஏமாற்றி எனது கல்லையும் கட்டையையும் கொண்டுவந்துவிட்டது இந்த நரி" என்று கூறியது குரங்கு.

**"இதென்ன குழப்பம்? யானையே... உண்மையிலேயே கல்லும் கட்டையும் கொண்டு வந்து போட்டது யார்?" என்று கர்ஜித்தது சிங்கம். "தலைவரே... கொண்டுவந்தது நரி என்றே வைத்துக்கொண்டாலும் அதைக் கஷ்டப்பட்டுச் சேர்த்தது குரங்குதான்" என்றது யானை.**

"பார்த்தீர்களா...? எப்படி ஏமாற்றினாலும் கடைசியில் உண்மையான உழைப்பு காட்டிக்கொடுத்துவிடும்" என்றது யானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுக்குள் மர்
# மாய மனிதனி

## துலங்காத மர்மம்...

1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி அவுஸ்திரேலியரான ட்ரேரவர் வைட் எனும் விமானி தனது சிறிய இலகுரக விமானத்தில் தென் மத்திய அவுஸ்திரேலியாவின் 'மாரி' நகரில் இருந்து 'கொபர்பேட்' நகரம் வரை பயணித்துக்கொண்டிருந் தார். ட்ரேரவர் வைட்டுக்கு இந்த விமானப் பயணம் சிரமமானதாக இருக்கவில்லை. இந்த விமானப் பயணம் ஃபினிஸ் ஸ்பிரிங்ஸ் எனும் பீடபூமிக்கு அருகாக அமைந்திருந்தது.

இந்த பீடபூமி 'மாரி' நகரில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது. இப் பீடபூமியின் 'வுமேரா பிரதேசம்' எனும் பிராந்திய வலயம் அவுஸ்திரேலியர்களுக்கு தடைசெய்யப்பட்ட

பிரதேசமாக அவுஸ்திரேலியாவின் ஆதிவாசி
களான அப்ரொஜினல் கோத்திரத்தாரால்
பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு பகுதியாகும்.

இதற்கு கௌரவமளிக்குமுகமாக இத்தடை
செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் வெள்ளையர்கள்
காலடி வைப்பதில்லை. எனினும், அன்று
பீடபூமிக்கு மேலாகப் பறக்க வேண்டும் போல்
ட்ரேரவர்க்குத் தோன்றியது. அவ்வாறு பறக்கும்
பொழுது வானில் இருந்து கீழ்நோக்கி பார்த்த
வேளையில் ஏதோ ஒன்று மேல்நோக்கி உயர்வ
தைக் கண்டார். அது பாரிய இராட்சத மனிதன்
ஒருவனின் உருவம். ஒரு கணம் ட்ரேரவர் வியப்
பில் மூழ்கினார். அவர் அந்த இராட்சத உருவத்
திற்கு மேலாக சில தடவைகள் விமானத்தில்
வட்டம் அடித்துப் பார்த்தார்.

## நகைப்புக்குரியதல்ல

மனித உருவமொன்றை கீழே பீடபூமியில் தான் கண்டதாக ட்ரேவர் விமானத்தில் உள்ள ரேடியோ மூலமாக கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்தார். எனினும், மாரி நகரில் எவரும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ட்ரேவர் கேலிசெய்கிறார் என சிரித்தனர்.

அந்த உருவம் காணப்பட்ட பீடபூமிக்கு இரு சிறிய பாதைகள் மூலமாக மட்டுமே செல்லக்கூடிய தாக இருந்தது. அதில் ஒரு பாதை உள்ளே நுழைவதற்கும் மற்றையது வெளியேறுவதற்கும் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், இந்த பீடபூமிக்குள் நுழைவது உண்மையில் மிகவும் கடினமானதாகும்.

## சுற்றுலா மையம்

ஊடகங்களிலும் இந்த தகவல் வெளிவரத் தொடங்கி யது. பெரும்பாலானோரின் அக்கறையினாலும், ஊடகங் களில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தின் காரணமாக வும் பீடபூமியின் இராட்சத மனிதனின் உருவம் குறித்து பலவாறு பேசத்தொடங்கினர். 1998 ஆம் ஆண்டின் இறுதியில், அந்த பீடபூமி அமைந்துள்ள பிரதேசத்தை சட்டபூர்வமாக தமது பொறுப்பின் கீழ் கொண்டுவர தென் அவுஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுத்தது. அதன்பின் இராட்சத மனிதனை பார்ப்பதற்காக விமானத்தின்மூலம் செல்வதற்கு அனுமதி கிடைத்தது. உண்மையில் இதுவொரு இராட்சத மனிதனின் உருவத்தை ஒத்த பிரமாண்டமான ஓர் ஓவியமே என்பது அப்போது தெரியவந்தது.

## மாரி மனிதன் அல்லது ஸ்குவட் இராட்சதன்

வானில் இருந்து பார்க்கும்பொழுது வெறும் ரேகை போல் நீண்டு செல்லும் இந்த உருவமானது, உண்மை யில் 4.2 கிலோ மீற்றர் உயரமும் 28 கிலோ மீற்றர் தூரம் முழுவதும் பரவி உள்ளது. இதற்கு 'மாரி மனிதன்' அல்லது 'ஸ்குவட்டின் இராட்சதன்' என பெயரிடப்பட் டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் அப்ரொஜினல் எனும் பூர்வீக குடிமகன் ஒருவரின் உருவமே இதில் காட்டப்பட்டுள் ளது. அந்த மனிதன் பறவை ஒன்றையோ அல்லது வேறொரு விலங்கையோ வேட்டையாடுவதற்கு பூமாரங் ஒன்றை வீசுவதற்கு ஆயத்தப்படுத்துவது போல் அந்த படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதனை வரைந்தது யார் என்பதுகூட இன்றுவரை மர்மமாகவே உள்ளது.

## காணாமல் போனான்

28 கிலோ மீற்றர் நீளமான மாபெரும் இந்த மனித உருவத்தை விண்வெளியில் இருந்துகூட காணக்கூடியதாக இருந்தது. 1998 இல் அமெரிக்காவின் நாஸா நிறுவனம் புவியின் சுற்றுப்பாதையில் தங்கிய செய்மதிகளின் மூலம் மாரி மனிதனின் புகைப்படத்தை பெற்றுக்கொண்டது. ஆனால், இன்று 'கூகுல் ஏர்த்' (google earth) வழியாக செய்மதி தொழில்நுட்பத்தின் மூலம் 'மாரி மனிதனை' பார்ப்பதற்கு முயற்சித் தவர்களுக்கு அம் மனிதனின் உருவத்தை காணமுடியா மல் உள்ளது. அதாவது, அந்த மாரி மனிதனை, இப்போது காண முடியவில்லை. விண்வெளிக்குக்கூட தெளிவாகத் தெரிந்த இந்த படைப்பு எமது கண்முன்னா லேயே காணாமல் போய்விட்டது.

ஓவியம் வரைந்த இடத்திற்கு சென்று பார்த்தால் நூற் றுக்கு 70 வீதமான ஓவியத்தின் பகுதிகளை காணக்கூடி யதாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும், ஓவியம் முழுமையாக அழிவடைந்துவிட்டதாக 'தி அட்வடைசர்' என்ற செய்தித்தாள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது. மாரி மனிதனின் மர்மம் துலங்குமுன் அது உலகிலிருந்து மறைந்தது கவலைக்குரிய விடயமே.

## மர்மமான நஸ்கா ரேகை

பெரு நாட்டின் அந்தீஸ் மலைத்தொடருக்கு அருகில் பாலைவனச் சமவெளியில் தரையைத் தோண்டி பல மைல் தூரம் நீண்டு செல்லும் வகையில் வரையப்பட்டதே இந்த நஸ்கா ரேகையாகும். இதனை நீண்ட நெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்த கோத்திரத்தாரே வரைந்ததாக நம்பப்படுகின்றது.

தரை மட்டத்தில் இருந்து பார்க்கும்பொழுது இது வெறுமனே சில அங்குலங்கள் மாத்திரமே இருப்பது போல் தோன்றினாலும் வானில் இருந்து பார்க்கும்பொழுது அது பிரமாண்டமாக தெரிவது பேராச்சரியமாகும். ஏனென்றால் இந்த ரேகைகள் மூலம் வெளிப்படுத்துவது மிகப் பெரிய அபூர்வ சித்திரமாகும். இந்த ஓவியங்களுக்கிடையே விலங்கின உருவங் கள் பல்வேறு மாறுபட்ட குறியீடுகள், மாதிரிகள் ஆகியனவும் காணப்படு கின்றன.

நீண்ட காலத்திற்கு முன் இப்பிரதேசத்தில் வாழ்ந்த இந்த நஸ்கா எனும் கோத்திரத்தார் வானில் இருந்து மாத்திரம் தெளிவாகப் பார்க்கும் வண்ணம் அல்லது ஆகாயத்திற்கு மாத்திரம் நன்கு தெரியும் இராட்சத ஓவியங்களை எதற்காக வரைந்தனர்? அவர்கள் யாருக்குத் தெரியும்படி அதனை வரைந்தனர்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மமாய் தெரிந்த ...ன் உருவம்...!



இறைவனுக்குத் தெரியவா? அப்படியாயின் யார் இந்த இறைவன்? நஸ்கா கோத்திரத்தார் இறைவனாக கருதியது வேற்றுக்கிரகத்தில் இருந்து வந்தவர்களையா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

## வேற்றுக்கிரக உயிரினங்கள்

ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த எரிக் வொன் டெனிகன் அவர்கள் 1970 இல் அவரால் எழுதப்பட்ட 'செரியட் டிஸ் ஒஃப் கோட்ஸ்' ...ும் நூலில் இந்த நஸ்கா ரேகைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

வேற்றுக்கிரக வாசிகளுக்கு வழிகாட்டவே இவை நிர்மாணிக்கப்பட்டதாகவும் வேற்றுக்கிரக பறக்கும் தட்டுகள் தரையிரங்குவதற்கு இந்த ஓவியங்கள் பெரிதும் உதவி இருக்கும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். எனினும், விஞ்ஞானிகள் இன்னும் இக்கருத்தை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றனர்.


எனினும், தொல்பொருளியலாளர்கள் வேறு கருத்துக்களையே முன்வைக்கின்றனர். (தரை) நிலக்கீழ் நீர் வழங்கல் குறித்தே இந்த ரேகைகள் காட்டுகின்றன என்பது அவர்களின் கருத்து. இந்த ரேகைகள் புராதன யாத்திரிகையாளர்களின் பயணப்பாதைகளையே காட்டுகின்றன என வேறு சிலர் நம்புகின்றனர்.

புராதன காலத்தில் இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த இன்று முழுமையாக மறைந்துபோன வழிபாட்டுத் தலங்களை தரிசிக்க பல்வேறு திசைகளில் இருந்தும் பக்தர்கள் குவிந்திருக்கலாம், அவர்களுக்கான வழிகாட்டல் ஓவியமாகவே இது இருந்திருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். இவ்வாறு பலரும் பலவிதமாக இந்த ரேகை ஓவியம் குறித்து, கூறுவதால், இந்த ஓவியம் தற்போதும் புரியாத புதிராக, மர்மமாகவே தொடர்கின்றது என்பதே உண்மையாகும்.

-விபாகர்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ..........................................................

01) இங்குள்ள பாடலை நன்றாக வாசித்து, கீழ்காணும் வினாக்களுக்கு விடை தருக.

ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் தமிழ்க் கிழவி

கூழுக்காகக் கவி பாடும்
கூனற் கிழவி அவர் உரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே

01. ‘கிழவி’ என்பதன் பொருள் யாது?
.............................................................................................
02. கிழவி எதற்காக கவிபாடுகின்றார்?
.............................................................................................
03. ‘வாழும் வாழ்வில்’ என்பதன் கருத்து யாது?
.............................................................................................
04. அஃறிணை பெயர்ச் சொல் ஒன்று தருக.
.............................................................................................
05. ‘பற்பல’ என்பதைப் பிரித்தெழுதுக.
.............................................................................................

02) பின்வரும் சொற்களை பிரித்தெழுதுக.

01. செந்தாமரை = .................................. + ..................................
02. மரவேர் = .................................. + ..................................
03. பள்ளிக்கூடம் = .................................. + ..................................

03) சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

01. உலகில்/ சீனமொழி/ அதிகமானோர்/ பேசும்/ மொழி/ ஆகும்/
.............................................................................................
02. கழுத்தில்/ அரசி/ முத்து/ பவளம்/ ஆகிய/ அணிந்திருந்தாள்/ மாலைகள்/
.............................................................................................

04) பின்வரும் சொற்களுக்கு ஆங்கில சொல் தருக.

01. விவசாயி - ..................................................
02. சுற்றாடல் - ..................................................
03. ஆறு - ..................................................
04. காடு - ..................................................

05) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கீறிடுக.

01. சூரிய குடும்பத்திலுள்ள மிகப் பெரிய கோள் எது?
1. வியாழன் 2. சனி 3. புதன்

02. எமக்கு சேவை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனம் எது?
1. வங்கி 2. தபால் நிலையம் 3. யுனிசெப்

03. வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடும் இடம்;
1. இலையின் கீழ்பகுதி
2. இலையின் மேல்பகுதி
3. பூக்களில்




04. கரும் பச்சை நிறமுள்ள இலைகளில் காணப்படும் கனியுப்பு எது?
1. விற்றமின் A 2. விற்றமின் D 3. இரும்புச் சத்து

05. பின்வருவனவற்றுள் ஒட்டுண்ணித் தாவரங்கள் எவை?
1. வெண்டி, ஆமணக்கு 2. குருவிச்சை, பனங்கற்றாளை
3. நாகதாளி, சதுரக்கள்ளி

06. மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்ட நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
1. வளைகுடா 2. தீவு 3. தீபகற்பம்

07. வெடித்துப் பரவும் வித்து எது?
1. காசித்தும்பை 2. தோடை 3. தாமரை

08. சூரிய ஒளியினால் எமக்கு கிடைக்கக்கூடிய விற்றமின் எது?
1. விற்றமின் A 2. விற்றமின் B 3. விற்றமின் D


09. இலங்கையின் நீளமான நதி எது?
1. களனி கங்கை 2. வளவே கங்கை
3. மகாவலி கங்கை

10. வறண்ட நிலப்பகுதி தாவரம் எது?
1. பனை 2. நாகதாளி 3. முருங்கை

11. உவர்த்தன்மை கொண்ட நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவு எது?
1. குடற்புண் 2. புற்றுநோய் 3. சிறுநீரகக் கற்கள்

12. இலங்கை, இந்தியா அமைந்துள்ள கண்டம் எது?
1. ஆபிரிக்கா 2. ஐரோப்பா 3. ஆசியா

06) 1-3 வரையுள்ள வினாக்களுக்கு வரைபை அவதானித்து விடை தருக.




01. A யிலிருந்து D வரை உள்ள தூரம் யாது? ..................................
02. E யிலிருந்து G க்கு உள்ள தூரம் யாது? ..................................
03. G இற்கு எத்திசையில் A உள்ளது?..................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -I)

(நொவெம்பர் 18 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 04. 3 | 07. 1 | 10. 3 | 13. 2 |
| 02. 1 | 05. 1 | 08. 2 | 11. 2 | 14. 1 |
| 03. 3 | 06. 3 | 09. 3 | 12. 1 | 15. 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலிங்கோ லைஃப்

ரன்தரு சாரிகா

# அறிவைத் தேடிச் செல்லும் சிறார்களுக்கு

கொழும்பைச் சுற்றியுள்ள பிரதான இடங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பு




## 12 வயதுக்கு குறைந்த தம்பி தங்கைகள் எவரேனும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி கற்கும் தம்பி தங்கைகளின் அறிவை வளர்க்கும் பொருட்டு, செலிங்கோ லைஃப் ரன்தரு சாரிகா கல்விச் சுற்றுலா 3வது தடவையாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இம் முறை நாங்கள் கொழும்புத் துறைமுகம், நெலும் பொக்குண, கொழும்பு தேசிய நூதனசாலை, ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பத்தரமுல்லை தியத பூங்கா மற்றும் கொழும்பைச் சுற்றியுள்ள பிரதான சில இடங்களைப் பார்ப்பதற்கு சிறார்களை அழைத்துச் செல்ல உள்ளோம்.

## செலிங்கோ லைஃப் கிளை உள்ள அனைத்து பிரதேசங்களிலிருந்தும் 4 வெற்றியாளர்கள்

எந்தவொரு செலிங்கோ லைஃப் கிளையிலும் 2016ம் ஆண்டுக்கான நேர அட்டவணையுடன் விண்ணப்பப்பத்திரத்தையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். அதனைப் பூர்த்தி செய்து 'செலிங்கோ லைஃப் டவர்', இல. 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது எந்தவொரு கிளையிலும் ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி 2016 ஜனவரி 31.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் 300 தம்பி தங்கைகள் அவர்களது அம்மா அல்லது அப்பா அல்லது பொறுப்பாளர் ஒருவருடன் இச் சுற்றுலாவில் பங்குபற்ற முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் இலவசமாக செய்து கொடுக்கப்படும். மேலும் 800க்கும் மேற்பட்ட ஆறுதல் பரிசுகள்.

இலத்திரனியல் ஊடக அனுசரணையாளர்:




PHOENIX O&M

WP/GT/4456

செலிங்கோ லைஃப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அமெரிகோவின் பெயரையே அமெரிக்கா கண்டத்திற்கு வைத்தனர்

அக்காலத்தில் ஐரோப்பியர்களிடையே நாடுகாண் பயணங்களில் கடும் போட்டி நிலவியது. போட்டி மாத்திரமல்ல சிலருக்கு அது பொழுதுபோக்காகவும் அமைந்தது. நாடுகாண் பயணங்களில் தன்னை அர்ப்பணித்தவர்களில் அமெரிகோ வெஸ்புசி என்பவரும் ஒருவர். வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய இரு கண்டங்களுக்கும் அமெரிக்கா எனும் பெயரை வைப்பதற்கு இந்த நாடுகாண் பயணியை கௌரவப்படுத்த வேண்டும் என்பதே காரணமாக அமைந்தது.

## பிள்ளைப்பருவம்

1451 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்தாலியின் ஃபுளோரன்ஸ் நகரில் பிறந்தவர். அமெரிகோ வெஸ்புசி. கல்வி கற்பதில் மிகவும் திறமைசாலியாக திகழ்ந்தார்.அத்தோடு, வானவியல் ஆய்வுகளிலும் கணிதத்திலும் திறமைகளை வெளிப்படுத்தினார். பொழுதுபோக்காக வரைபடங்களையும் பிரதிபண்ணினார். சிறு வயது முதலே உலகம் முழுவதும் சென்று தகவல்களை அறிந்துகொள்ள வேண்டுமென்பதே அவரது கனவாக இருந்தது.



## இத்தாலியில் இருந்து ஸ்பெயினுக்கு

கல்வி கற்பதில் மிகவும் திறமைசாலியாக இருந்தபொழுதிலும் வயது வந்த பின் வர்த்தகத்துறையில் தனது கவனத்தை செலுத்தினார். நாடுகாண் பயணத்திற்கு அதிக பணம் செலவாகும் என்பதால் அப்பணத்தை தேடுவதற்கே வியாபாரத்தில் ஈடுபட்டார். அவ்வாறு பணத்தைச் சேகரித்து தனது கனவை நனவாக்க பெருமுயற்சி மேற்கொண்டபொழுதிலும் அக்காலத்தில் இத்தாலி தேசமானது, நாடுகாண் பயணத்தில் பெரிதும் அக்கறை செலுத்தவில்லை.

எனவே, இத்தாலியின் ஃபுளோரன்ஸ் நகரில் இருந்து ஸ்பானியா நாட்டுக்குச் செல்ல தீர்மானித்தார். பின்னர் அவர் 1945ஆம் ஆண்டளவில் கப்பல் நிறுவனமொன்றின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக, அவருக்கு சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதற்குத் தேவையான கப்பல்களை பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்பட்டது.

## வெஸ்புசியின் சுற்றுலா

1497 இல் வெஸ்புசி தனது முதலாவது கடல் பயணத்தை ஆரம்பித்தார். முதலாவது பயணத்தை முடித்துக்கொண்டு 1498 இல் மீண்டும் திரும்பினார். அவர் தனது இரண்டாவது பயணத்தை 1499 இல் ஆரம்பித்தார். அப்பயணத்திற்கு தளபதி ஒருவரையும் மேலும் ஒரு குழுவையும் இணைத்துக்கொண்டார். இக்குழு முதன்முதலாக இன்றைய நிகரகுவா நாட்டின் கரையோரத்தை அடைந்தது. அதன்பின் தென் திசை நோக்கி தொடர்ந்து பயணித்த அவர்கள் அமேசன் கங்கையின் கழிமுகம் வரை பயணித்தனர். திரும்பி வரும் வழியில் டிரினிடாட் தீவிற்கு வந்து பின் ஒரினாகோ நதிக்கழிமுகத்தையும் கடந்தனர். அதனைத் தொடர்ந்து ஹெயிட்டியை நோக்கி சென்றனர். பயணத்தின் இறுதியில் வெனிசுவெலா நாட்டிற்கு சென்றனர்.




## இரண்டாவது பயணத்தின் முடிவு

வெஸ்புசி தனது இரண்டாவது பயணத்தை ஆசியா கிழக்குப் பகுதியை நோக்கி மேற்கொண்டார். இரண்டாவது பயணத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பின் ஸ்பானியா நோக்கி மீண்டும் பயணித்தார். இந்து சமுத்திரத்தின் வழியாக பயணித்து வங்காளவிரிகுடாவைக் கடந்து தெப்ரபேன் என அழைக்கப்படும் இலங்கையில் தரை இறங்க உத்தேசித்தார். எனினும், ஸ்பானிய அரசு அவரின் நோக்கத்திற்கு இணங்கவில்லை.



## இத்தாலியை நோக்கி

தனது நோக்கத்தை நிறைவேற்ற ஸ்பானியாவின் உதவி கிடைக்காததால் இத்தாலிக்குச் சென்றார். பின் அங்கிருந்து தென்மேற்கு நோக்கிப் பயணித்து பிறேசிலை அடைந்தார்.

## வரைபடத்தில் தகவல்கள்

வெஸ்பூசி மீண்டும் ஒருமுறை ஸ்பானியாவுக்கு வந்தார். அங்கு தான் கண்டுபிடித்த புதிய உலகம் குறித்த தகவல்களை வெளியிட்டார். அந்த தகவல்களை கேட்டு வரைபட கலைஞர்கள் அதன்படி வரைபடங்களை தயாரித்தனர். அந்த புதிய உலகத்தில் காலடி வைத்த முதல் ஐரோப்பியர் அமெரிக்கோ வெஸ்புசிதான் என்பதை உறுதி செய்த ஒரு வரைபடக் கலைஞர் அவரைக் கௌரவிக்கும் முகமாக அப்புதிய பூமிக்கு 'அமெரிக்கா' என பெயர் வைத்தார்.

## இறுதி யாத்திரை

எந்தவித இலாப நோக்கமோ, சுயநலம் கருதியோ அன்றி புதிய உலகம் குறித்த தேடல்களை தனது உள்ளத்தில் வளர்த்துக் கொண்ட ஆசையை நிறைவேற்றவே அவர் பல பயணங்களை மேற்கொண்டார். இறுதியாக இத்தகையதோர் நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டபொழுது 1512 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு அவர் மரணத்தை தழுவினார்.




-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றிலிருந்து மின்சாரம்





தளுவ நிர்மலபுர, புத்தளம், சேதபொல ஆகிய பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று காற்று மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் 30 மெகாவொட் மின்சாரம், தேசிய மின்னுற்பத்தியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த மின் நிலையங்களுக்கான செலவினத்தினை நிர்மலபுர வின்ட் பவர், டேலி லைஃப் ரினியுவபல் மற்றும் பவர் ஜேன் லங்கா ஆகிய நிறுவனங்கள் ஏற்றுள்ளன.

ஒரு நிலையத்திற்கான செலவு சுமார் 240 கோடி ரூபாய்களாகும். 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சார தேவையில் நூற்றுக்குப் பத்து சதவீதத்தினை காற்று, சூரிய ஒளி மற்றும் உயிர்வாயு ஆகிய சக்திப் பிரவாகங்களினூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திலிருந்து நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பறக்கும் மரப் பாம்பு





* உயிரியல் பெயர்: *Chrysopelea ornata*

பாம்புகளில் மிகவும் அழகானது. ஆங்கில மொழியில் golden tree snake, gliding snake, ornate flying snake, golden flying snake, gold and black tree snake ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றது. சிங்கள மொழியில் மல்சரா, பொல்மல் கறவல போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இந்த பாம்பு, பொதுவாக பச்சை நிற உடலைக் கொண்டிருக்கும். எனினும், பெரும்பாலான பாம்புகளின் உடல் கருமை நிறமாக இருக்கும். குறுக்காக மஞ்சள் நிறக் கோடுகளைக் காண முடியும். இவற்றில் சில பாம்புகளின் உடலின் நடுப்பாகத்தில் சிவப்புநிறப் புள்ளிகளையும், சில பாம்புகளில் மஞ்சள்நிறப் புள்ளிகளையும் காணலாம்.

தட்டையான தலை அமைப்பையும் வளைவான கழுத்தையும் கொண்டிருக்கும் இவ்வகைப் பாம்பொன்று, 80 முதல் 120 சென்ரிமீற்றர் நீளம் வரை வளரும். இந்த பாம்புகள் ஓரளவு விஷம் கொண்டவையாகும். மரங்கள் மற்றும் புதர்களுக்கிடையே வாழும். மரங்களின் உயர் கிளைகளிலும் இவற்றைக் காணலாம். உயரமான இடங்களிலிருந்து தாழ்வான இடங்களை நோக்கிப் பாயும் ஆற்றல் கொண்டுள்ளதனால், இவற்றைப் 'பறக்கும் பாம்பு' என்றும் கூறுவர். முட்டையிட்டு இனத்தினைப் பெருக்கும் தன்மைகொண்ட இவ்வகைக்குரிய பெண் பாம்புகள், மழைக்காலங்களில் ஒரு தடவையில் 6 முதல் 12 முட்டைகளை இடும்.



# இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள பூச்சிக்கொல்லிகள்

வரையறை இல்லாமல் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதனால் உலகம் முழுவதும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. பயிர்களுக்கு இடப்படும் பூச்சிக் கொல்லிகள், உணவு மற்றும் நீர் மூலம் மனித உடலுக்குள் சென்று விடுகின்றன. இதனால், மனிதனின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலானோரை தாக்கியுள்ள சிறுநீரகக் கோளாறுகளுக்கும் இந்த பூச்சிக்கொல்லிகள் பாவனையும் ஒரு காரணமாகும் எனக் கூறப்படுகின்றது. இதனால், ஒருசில பூச்சிக்கொல்லிகளுக்கு இலங்கையில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றின் பெயர்கள் வருமாறு:



## பூச்சிக்கொல்லிகளின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| * 2, 4, 5- T | * HCH (mixed isomers) | * pentachlorophenol |
| * Arsenic | * heptachlor | * hosphamidon |
| * captafol | * leptophos | * quintozene |
| * chlordane | * lindane | * endrin |
| * DDT | * chlorophyriphos | * propanil |
| * dichloropropane | * carbofuran | * aldrin |
| * dieldrin | * mercury | * aldicarb |
| * carbaryl | * methamidophos | * chlordimeform |
| * ethyl parathion | * methyl parathion | * thâlium sulphate |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# செவ்வா...
# எதிர்கொள்ள ...

செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் திட்டம் அமெரிக்காவின் நாஸா நிறுவனத்திற்கு மட்டுமன்றி, ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்திற்கும் ரஷ்யாவுக்கும்கூட உள்ளது. இவற்றில் எந்த நாடு முந்திக்கொள்ளும் என்பதை இன்னும் கூறமுடியாதுள்ள போதும், 2030 ஆம் ஆண்டளவில் மனிதனை அழைத்துச்செல்லும் ரொக்கெட் விண்கலமொன்றை செவ்வாய்க்கு அனுப்பத் தாம் திட்டமிட்டிருப்பதாக நாஸா நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும், அமெரிக்கா முகம்கொடுக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக, அந்த கால எல்லை மேலும் நீடிக்கலாம் என கருதப்படுகின்றது.

எவ்வாறாயினும், செவ்வாய் செல்லும் திட்டம் மேற்கூறிய ஏதேனுமொரு நாட்டினால் முதன்முதலில் அமுல்படுத்தப்படுவதாக வைத்துக்கொள்வோம். ஆனால், அதன் பின்னர் அங்கு செல்பவர்கள் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதில் ஒன்றுதான் செவ்வாயின் மேற்பரப்பில் எவ்வாறு பாதுகாப்பாக தரையிறங்கலாம் என்பதாகும். செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலம் மிகவும் நுண்ணியது. அது புவியின் வளிமண்டலத்தின் 1/100 பங்காகும். எனவே, நாஸா நிறுவனத்தின் விண்கலத்தைப் போல மிதந்து சென்று அங்கு தரையிறங்க முடியாது. செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலத்தினுள் பிரவேசித்தால், வேகத்தைக் கட்டுப்படுத்தவோ, வேகத்தைக் குறைக்கவோ முடியாது. ஆக, இதற்கான வழிமுறையொன்றை நாஸா விஞ்ஞானிகள் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

## இரண்டு வழிமுறைகள்

அதன்படி, செவ்வாயின் மேற்பரப்பில் மனிதர்களைக் கொண்டு செல்லும் விண்கலத்தை இரு வழிமுறைகளில் தரையிறக்குவதே இவர்களின் நோக்கமாகும். முதலாவது வழிமுறையின்படி, விண்கலத்தை தன்னியக்கமாக மணிக்கு 1,600 கிலோ மீற்றர் என்ற ரீதியில் வேகத்தைக் குறைத்து, விண்கலத்தில் எதிர்த்திசையில் உள்ள சிறிய ரொக்கெட்டொன்றை இயக்கி உந்துதல் ஒன்றை வழங்குவதன்மூலம் தரையிறங்குவதை சாத்தியப்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

கலிஃபோர்னியாவின் பசதேனா எனும் இடத்தில் அமைந்துள்ள நாஸா நிறுவனத்தின் ஜெட் ஆய்வு நிறுவனத்தின் பொறியியலாளரான ரோப் மேனிங் என்பவர்தான் இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளார். ரோப் மேனிங் உள்ளிட்ட குழுவினரே செவ்வாயின் மேற்பரப்பில் சோஜேர்னர், ஒபர்ச்சுனிட்டி மற்றும் ஸ்பிரிட் ஆகிய ஆய்வுக் கலங்களை வெற்றிகரமாக தரையிறக்க திட்டமிட்டவர்களாவர். இப்பொழுது அந்த சிறிய ரொபோ ஆய்வுக்கலங்களில் இருந்து பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு Mars Science Laboratory எனும் ரொபோ ஆய்வுக் கலத்தை இவ்வருடத்தில் செவ்வாயை நோக்கி அனுப்ப இந்த குழுவினர் தயாராகி வருகின்றனர். எனினும், 900 கிலோ கிராம் நிறையுள்ள Mars Science Laboratory எனும் ஆய்வுக் கலத்தை செவ்வாய் மீது தரையிறக்குவது பெரும் சவாலாகும் என்று ரோப் மேனிங் தலைமையிலான குழுவினர் கூறுகின்றனர்.

முதலாவது வழிமுறையின் படி, குறித்த விண்கலமானது, தன்னியக்கமாக மணிக்கு 1,600 கி.மீற்றர் வரை வேகத்தைக் குறைத்த பின்பே தரையிறக்கப் படும் என்று கூறப்பட்டாலும், ரோப் மேனிங்கின் பொறியியல் குழுவிற்கு இது குறித்து உறுதி யான கருத்தெதுவும் இதுவரை தெரிவிக்க முடியாமல் உள்ளது. இந்நிலையில், விண்கலத்தை

ராட்சத பெரஷ...
ட்ன் செவ்வா...
குவதற்கான இ...
வழிமுறை குறி...
கவனம் செலு...

## நீர் மீள்...


செவ்வாய் ப...
போ... அதிக...
வது நீராகும். ...
மீள்சுழற்சி மு...
மாகும். விண்...
கும்போது நா...
மனிதனுக்கு ...
நீரின் அளவு, ...
மனிதனுக்கு ...
நீரின் அளவை...
அதிகமாகும். ...
விண்வெளி நி...
இருக்கும் விண்...
ஒருவர் நாளொ...
ணமாக 11 லீற்...
டுத்துவார். ஐந்...
வீரர்கள் 1000 ...
மொன்றுக்காக...
நோக்கிப் பய...
கொண்டால், ...
55,000 லீற்றர் ...
அதன்படி, 55...
கிராம் நிறை...
செல்வதும் மி...
நடவடிக்கைய...
தற்பொழுது ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...வ்வாய் சென்றால்..
# ...ள நேரிடும் சவால்கள்





ராட்சத பெரஷுட்டின் உதவியுடன் செவ்வாய் மீது தரையிறக்குவதற்கான இரண்டாவது வழிமுறை குறித்தும் அவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

## நீர் மீள் சுழற்சி

செவ்வாய் பயணத்தின் போ... அதிகளவு தேவைப்படுவது நீராகும். எனவே, நீர் மீள்சுழற்சி முறை மிக அவசியமாகும். விண்வெளியில் இருக்கும்போது நாளொன்றுக்கு மனிதனுக்கு தேவைப்படும் நீரின் அளவு, புவியில் இருக்கும் மனிதனுக்கு தேவைப்படும் நீரின் அளவைவிட மிகவும் அதிகமாகும். சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் விண்வெளி வீரர் ஒருவர் நாளொன்றுக்கு சாதாரணமாக 11 லீற்றர் நீரை பயன்படுத்துவார். ஐந்து விண்வெளி வீரர்கள் 1000 நாட்கள் திட்டமொன்றுக்காக செவ்வாயை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டால், அவர்களுக்கு 55,000 லீற்றர் நீர் தேவைப்படும். அதன்படி, 55,000 கிலோ கிராம் நிறையை எடுத்துச் செல்வதும் மிகச் சிரமமான நடவடிக்கையாகும்.

தற்பொழுது புவியில் இருக்கும் விண்கலத்தில் அத்தகைய நிறையை எடுத்துச்செல்வது மிகவும் கடினம்.


ஆகவே, விண்வெளி வீரர் ஒருவரின் அன்றாட நீர்த் தேவையின் 90% ஐ மீள் சுழற்சி செய்வதன்மூலம் பூர்த்திசெய்ய முடியும். பயனியர் எஸ்ட்ரோநொடிக்ஸ் நிறுவனத்தின் 'செவ்வாய் குடியேற்றம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமும் இதுவாகும் என்று அந்நிறுவனத்தின் செவ்வாய் குடியேற்றத்தின் ஆரம்ப உறுப்பினராக கருதப்படுகின்ற ரொபர்ட் சுப்ரின் கருத்து வெளியிட்டுள்ளார்.


செவ்வாய்க்குச் செல்ல விரும்பும் பலர் இப்பொழுது இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புகொண்டுள்ளனர். அந்தவகையில், செவ்வாய் செல்லும் விண்வெளி வீரர்கள் தாம் பயன்படுத்தும் ஒவ்வொரு நீர்த் துளியையும் சேகரித்து மீள் சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்த நேரிடுமென ரொபட் சுப்ரின் கூறுகின்றார். சிறுநீர், வியர்வை என்பனவற்றைக்கூட முன்னர் கூறியதுபோல் சுத்திகரித்து குடிப்பதற்கு பயன்படுத்த நேரிடும். குளிப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் தேவையான நீரைக்கூட மீள் சுழற்சி செய்தே பெறவேண்டி இருக்கும் என்று கூறப்படுகின்றது.

## ஒட்சிசன் உற்பத்தி

செவ்வாய் கிரகத்தின் நுண்ணிய வளிமண்டலத்தில் நூற்றுக்கு 95 சதவீதமாக இருப்பது காபனீரொட்சைட் ஆகும். இதன் காரணமாக, விண்வெளி வீரர்களுக்குத் தேவையான ஒட்சிசனை உற்பத்தி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக சிறிதளவு ஐதரசன் போதுமானது என்று கூறப்படுகின்ற நிலையில், செவ்வாய் செல்லும்போது விண்வெளி வீரர்கள் ஐதரசனையும் கொண்டு செல்ல நேரிடுகின்றது. ஐதரசன் மற்றும் காபனீரொட்சைட்டின் மீள் செயற்பாட்டின் மூலம் நீரை உற்பத்தி செய்ய முடியும். அதன்பின் அந்த நீரைக்கொண்டு ஒட்சிசன், மெதேன் என்பனவற்றை தேவையானளவு தயாரித்துக்கொள்ளலாம். இவ்வாறு திட்டமிடல்கள் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே, செவ்வாயின் மேற்பரப்பில் பெருக்கெடுத்து ஓடும் நீர் இருக்கலாம் என அண்மையில் எதிர்வுகூறப்பட்டது. எனவே, விண்வெளி வீரர்களுக்கு இதுவொரு நல்ல செய்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கன்னெலிய உயிர்க்கோளக் காப்பகம்

கன்னெலிய-தெதியகல-நாக்கியாதெனிய வனத் தொகுதிக்குரிய ஒரு பகுதியாக திகழும் கன்னெலிய வனமானது, இலங்கையின் தென்மேல் பகுதியில் அமைந்துள்ளது. காலி நகரிலிருந்து வடகிழக்கு நோக்கி 35 கிலோ மீற்றர் பயணிப்பதன்மூலம் இந்த இடத்தை அடையலாம். கன்னெலிய வனப் பகுதியானது, சுமார் 6,144 ஹெக்டெயர் நிலப்பரப்பினை உள்ளடக்கியுள்ளது. சிங்கராஜா வனாந்தரத்திற்கு அடுத்ததாக இலங்கையில் இன்று எஞ்சியிருக்கும் மிகவும் பசுமையான தாழ்நில மழைக்காடு இது மாத்திரமே ஆகும்.


1934 இல் வன பாதுகாப்புத் திணைக்களத்தால் கன்னெலிய வனம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1990 இன் முன்னரைப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட வனமாக இது அறிவிக்கப்பட்டது. யுனெஸ்கோ அமைப்பின் மனிதன் மற்றும் உயிர்க்கோள நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் கன்னெலிய வனமானது, 2004 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச உயிர்க்கோளக் காப்பகமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தாவர வளங்களைப் பொறுத்தவரையில், தெற்காசியாவில் அமைந்துள்ள உயர் பெறுமதிமிக்க வனங்களில் கன்னெலிய வனமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. தாழ்நில ஈரவலயம் என்றும் பசுமையான காடாக இது திகழ்கின்றது. இங்கு உயிரின பல்வகைமை மிகவும் உயர் மட்டத்தில் காணப்படுவதாக கூறப்படுகின்றது. சுமார் 301 தாவர வகைகள் உள்ளன. அவற்றுள் 141 தாவர வகைகள் இலங்கைக்கே உரிய தாவர வகைகளாகும் என்று கூறப்படுகின்றது.

இலங்கைக்கு மாத்திரம் உரித்தான தாவர வகைகளில், 15 வகைகள் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளன. அத்தோடு, 26 வகையான தாவரங்கள் இலங்கையிலிருந்து முற்றாக அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகின்றது. ஈரவலயக் காடுகளிலேயே உயர் தனித்துவமும் அபூர்வமான தாவர வகைகளில் நூற்றுக்கு அறுபது சதவீதத்தைக் கொண்டதுமான ஈரவலயக் காடாகவும் கன்னெலிய வனம் பிரசித்தி பெற்றுள்ளது.


மேலும், இந்த வனத்துக்கே தனித்துவமான பலவகையான விலங்குகளும் இங்கு காணப்படுகின்றன. சுமார் 220 விலங்கினங்கள் இங்கு காணப்படுவதோடு, அவற்றில் 41 வகையானவை கன்னெலிய வனத்திற்கு மட்டும் உரித்தான விலங்கினங்களாகும். தவிர, 59 பறவை இனங்கள், 14 வகையான ஈரூடகவாழிகள், 32 வகையான வண்ணத்துப்பூச்சிகள், 7 வகையான பாம்புகள், 10 வகையான பாலூட்டிகள் போன்றவற்றின் வாழிடமாகவும் காப்பகமாகவும் கன்னெலிய வனம் காணப்படுகின்றது.

அத்துடன், இங்கு காணப்படும் நீர்நிலைகள் கன்னெலிய வனப்பகுதியை வளப்படுத்தி வருகின்ற இயற்கையின் கொடைகளாக உள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# முத்துராஜவல



முத்துராஜவல சரணாலயமானது, உயிரின பல்வகைமையில் மிகவும் வளமான ஈரநில சூழல் தொகுதியாகும். உலக விலங்கு புகலிட தாபனத்தின் (I UCN) தரவுகளின்படி இந்த சதுப்பு நிலத்தில் 14 இனங்களைச் சேர்ந்த 34 வகையான முலையூட்டிகளும், 21 வகையான மீன் இனங்களும் 14 வகையான ஈரூடகவாழிகளும் 31 வகையான ஊர்வனவும், 102 வகையான பறவை இனங்களும் 48 வகையான வண்ணத்துப்பூச்சிகளும் உயிர் வாழ்கின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தான முத்துராஜவல சூழல் பாதுகாப்பு பிரதேசம் அல்லது முத்துராஜவல சரணாலயம் என இது அழைக்கப்படுகின்றது. இச் சரணாலயம் கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலகத்தின் ஐந்து கிராமசேவகர் பிரிவு முழுவதும் பரவியுள்ளது. கோட்டை இராச்சியம் கோலோச்சிய காலத்தில் மிகவும் வெற்றிகரமான விவசாய விளை நிலமாக முத்துராஜவல திகழ்ந்தது. மன்னர்களுக்காக முத்துப் போன்ற அரிசியை வழங்கியதாலும் முத்துராஜா எனும் ஒருவரின் கட்டளையின்கீழ் இப்பிரதேசம் இருந்தமையாலும் இவ்விடம் முத்துராஜவல எனும் பெயர் பெற்றதாக வாய்மொழிக் கதைகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின்கீழ் இருந்தவேளையில் இலகுவாக பொருட்களை கொண்டு செல்வதற்காக வெட்டப்பட்ட ஒல்லாந்த கால்வாய் மற்றும் ஹெமில்டன் கால்வாய் வழியாக உப்புநீர் இப்பகுதி வயல்களுக்குள் பெருக்கெடுத்தமையால் பிற்காலத்தில் விவசாயம் செய்யத் தகுதியற்ற நிலமாக கைவிடப்பட்டு பின் சதுப்பு நிலமாக இந்நிலம் மாறியது. இந்த சதுப்பு நிலம் 1996 ஆம் ஆண்டில் வனவிலங்குகள் புகலிட திணைக்களத்தினால் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

முத்துராஜவல வனப் பாதுகாப்பு வலயம், உயிரின பாதுகாப்பு வலயம், கலப்பு நகர வலயம் எனும் இப்பிரதேசம் பிரதான மூன்று வலயங்களை கொண்டது. இதன் பரப்பு 20,667 ஹெக்டெயர் ஆகும். இந்த ஈரநில சூழல் தொகுதியானது பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மீன்பிடிக் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், கடற்படை நடவடிக்கைகள், இயற்கை திரவியங்களை பெற்றுக்கொள்ளுதல், உயிரின வாழ்விடம் வழங்குதல், கல்வி மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக இது பயன்படுத்தப்படுகின்றது.

உயிரின பல்வகைமையில் மிகவும் வளமான ஈரநில சூழல் தொகுதியான முத்துராஜவல சரணாலயம் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தும் மிக முக்கிய பிரதேசமாகவும் விளங்குகின்றது.

(-அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: **අම්මේ! මම එහා ගෙදර නංගි එක්ක කතා කළා.**
அம்மே! மம எஹா கெதர நங்கி எக்க கதா களா.
மகள்: **அம்மா! நான் அடுத்த வீட்டு தங்கையுடன் கதைத்தேன்.**

අම්මා: **එයාලා කොහේ අයද?**
எயாலா கொஹே அயத?
அம்மா: **அவர்கள் எந்த இடத்திற்குரியவர்கள்?**

දුව: **මෙහාට එන්න ඉස්සර ගාල්ලෙලු හිටියේ.**
மெஹாட்ட என்ன இஸ்ஸர கால்லெலு ஹிட்டியே.
மகள்: **இங்கு வர முன்னர் காலியில் இருந்தார்களாம்.**

අම්මා: **ඇයි මෙහේ ඇවිත් තියෙන්නේ?**
எய் மெஹே எவித் தியென்னே?
அம்மா: **ஏன் இங்கே வந்திருக்கிறார்கள்?**

දුව: **එයාලගේ තාත්තාට මෙහේ ලංකා බැංකුවට මාරුවීමක් ලැබිලා.**
எயாலகே தாத்தாட்ட மெஹே லங்கா பெங்குவட்ட மாருவீமக் லெபிலா.
மகள்: **அவர்களுடைய அப்பாவிற்கு இங்குள்ள இலங்கை வங்கிக்கு இடமாற்றம் கிடைத்திருக்கிறது.**

අම්මා: **ආ.. ඇත්තද?**
ஆ... எத்தத?
அம்மா: **ஆ... உண்மையாகவா?**

දුව: **අම්මා, ඒ නංගිත් අපේ ස්කෝලෙටයි යන්නේ.**
அம்மா, ஏ நங்கித் அப்பே ஸ்கோலெட்டய் யன்னே.
மகள்: **அம்மா, அந்த தங்கையும் எங்களுடைய பாடசாலைக்குத்தான் போகிறாள்.**

අම්මා: **එහෙනම් ඔයාට හොඳයිනේ.**
எஹெனம் ஒயாட்ட ஹொந்தய்னே.
அம்மா: **அப்படியென்றால் உங்களுக்கு நல்லம்தானே.**

දුව: **ඔව් අම්මේ. එයත් හරි සතුටු උනා. අපි දෙන්නටම එකට පාසල් යන්න පුළුවන්.**
ஒவ் அம்மே. எயத் ஹரி ஸதுட்டு உனா. அப்பி தென்னட்டம எகட்ட பாசல் யன்ன புளுவன்.
மகள்: **ஆம் அம்மா. அவளும் மிகவும் சந்தோஷப்பட்டாள். எங்கள் இரண்டு பேருக்கும் ஒன்றாகப் பாடசாலைக்குப் போகலாம்.**

අම්මා: **ආ.. ඒකත් හොඳයි.**
ஆ... ஏக்கத் ஹொந்தய்.
அம்மா: **ஆ... அதுவும் நல்லது.**

දුව: **එයාලා අද හවස අපේ ගෙදර එනවා කිව්වා අම්මේ.**
எயாலா அத ஹவச அப்பே கெதர எனவா கிவ்வா அம்மே.
மகள்: **அவர்கள் இன்று மாலை எங்கள் வீட்டிற்கு வருவதாகச் சொன்னார்கள் அம்மா.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. එයාලා ................. අයද?
2. පාසල් යන්න ....................
3. ගෙදර ............. කිව්වා.




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**If எனும் இணைக்கும் சொல்லைக் கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை மேலும் இங்கே அவதானிப்போம்.**

அ) If you write the letter clearly, I can read it.
நீ கடிதத்தைத் தெளிவாக எழுதுவாயெனில், என்னால் அதை வாசிக்க முடியும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- If you write the letter clearly,
  நீ கடிதத்தை தெளிவாக எழுதுவாயெனில்,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- I can read it.
  என்னால் அதை வாசிக்க முடியும்.
  (பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)

ஆ) If you go there on time, you can catch the train.
நீ உரிய நேரத்துக்கு அங்கே செல்வாயெனில், உன்னால் ரயிலைப் பிடிக்க முடியும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- If you go there on time,
  நீ உரிய நேரத்துக்கு அங்கே செல்வாயெனில்,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- You can catch the train.
  உன்னால் ரயிலைப் பிடிக்க முடியும்.
  (பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)

இ) If the rain stops, I can go out.
மழை நிற்குமாயின், என்னால் வெளியே போக முடியும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- If the rain stops,
  மழை நிற்குமாயின்,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- I can go out.
  என்னால் வெளியே போக முடியும்.
  (பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)

ஈ) If you tell him the truth, he will help you.
நீ அவனிடம் உண்மையைக் கூறுவாயெனில், அவன் உனக்கு உதவுவான்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

- If you tell him the truth,
  நீ அவனிடம் உண்மையைக் கூறுவாயெனில்,
  (துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- He will help you.
  அவன் உனக்கு உதவுவான்.
  (பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி பாவனைக்கு அனுமதிப் பத்திரம் பெறவேண்டியிருந்த காலம்

வானொலியை பாவிப்பதற்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்றவோர் நிலை இருந்திருந்தால் எப்படி இருக்கும்? உண்மையிலேயே 80 ஆம் ஆண்டுகள் வரை அப்படியான ஒரு நிலை இலங்கையில் நிலவியது. அதாவது, வானொலியை பாவிப்பவர்கள் தத்தமது வானொலிக்கென வானொலி அனுமதிப் பத்திரம் (Radio licence) பெறவேண்டும் என்றவோர் அரசாங்க கட்டாயம் நிலவியது. இதன்படி ஒவ்வொரு வருடமும் பாவனையாளர்கள் உரிய கட்டணங்களை செலுத்தி தமது வானொலிப் பெட்டிக்குரிய அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல் வேண்டும்.





வானொலிப் பெட்டிக்குரிய ஆவணங்களுடன் தபால் நிலையங்களில் இந்த கட்டணங்களை செலுத்தக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருட இறுதியிலும் இதற்கான அறிவித்தல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வந்தன.

இதேவேளை, இவ்வாறு பாவனையாளர்கள் தத்தமது வானொலிகளுக்கு அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ளனரா? இல்லையா? என்பதை கண்டறிவதற்காக விசேட பரிசோதகர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இதன்படி எதிர்பாராத விதமாக வீடுகளுக்கு திடீர் விஜயத்தை மேற்கொள்கின்ற இந்த பரிசோதகர்கள் உரிய வருடத்திற்கான அனுமதிப் பத்திரத்தை பரிசோதிப்பர். அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பாவனையாளர்களுக்கு பல மடங்கு அபராதம் விதிக்கப்படும் முறையும் அமுலில் இருந்தது.

இன்னொரு வகையில் பார்க்கையில் இவ்வாறு அனுமதிப் பத்திரத்தை பரிசோதிக்கும்போது, குறித்த வானொலிகள் உரிய ஆவணங்களைக் கொண்டுள்ளனவா? அல்லது அவை திருடப்பட்டவையா? என்பதைக் கண்டுபிடிக்கக் கூடிய வாய்ப்புகளும் இருந்தன. ஒருவர் முறைப்படி வானொலியை விலைகொடுத்து வாங்கியிருந்தால் அதற்கான ஆவணங்களை அவர் கொண்டிருப்பார். ஆனால், இன்னொருவரிடமிருந்து திருடப்பட்டோ, கபளீகரம் செய்யப்பட்டோ இருந்தால் உரிய ஆவணங்களை அவர் கொண்டிராத நிலையில் வானொலி அனுமதிப் பத்திரத்தையும் பெறமுடியாத நிலையில் இருப்பார். எனவே, அனுமதிப் பத்திர பரிசோதனையின்போது, இத்தகைய நபர்களும் சிக்கிக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளும் இருந்தன.

ஒரு காலத்தில் வானொலிப் பெட்டி என்பது அந்தளவிற்கு விலைமதிப்பு மிக்க ஆடம்பரப் பொருளாக இருந்தது. இருப்பினும், கால ஓட்டத்தின் பின்னர் இந்த தனித்துவத்தன்மை நீங்கியதுடன், வானொலியானது, சாதாரண ஒரு பாவனைப் பொருள் என்ற நிலைக்கு மாறியது. இதற்கேற்ப 90 ஆம் ஆண்டுகளின் பின்னர் வானொலி அனுமதிப் பத்திரத்தைப் பெறும் முறையை அரசாங்கம் நீக்கியது.

(தொடரும்)

-ரிஷபன்


வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

* Practical English Learning Software DVD



* 4000 English Letter Writing Software



* 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்.....

* ஆங்கில கற்கும் மென்பொருள் DVD
* 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
* 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்

*11.11.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:*
வலெரி ஸ்பிரிடினோவ்

Pen Drive வெற்றியாளர்:
கே.நித்தி,
23/3, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(25.11.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
25.11.2015
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக ஜம்போரி இலச்சினைகள்

1920 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையில் 105 வருடங்களுக்குள் நடைபெற்ற உலக சாரணர் ஜம்போரியை முன்னிட்டு வெளியாகிய ஜம்போரி லட்சினைகளை இங்கு காணலாம்.

1ஆவது உலக ஜம்போரி




1920 இங்கிலாந்து - ஒலிம்பியாவில்

2ஆவது உலக ஜம்போரி




1924 டென்மார்க் - கோப்டன் ஹேகன்

3ஆவது உலக ஜம்போரி




1929 இங்கிலாந்தின் பிரிக்கன் ஹேட்

4ஆவது உலக ஜம்போரி




1933 ஹங்கேரி

5ஆவது உலக ஜம்போரி




1937 நெதர்லாந்து

6ஆவது உலக ஜம்போரி




1947 பிரான்ஸ்

7ஆவது உலக ஜம்போரி




1951 ஒஸ்ட்ரியா

8ஆவது உலக ஜம்போரி




1955 கெனடா

9ஆவது உலக ஜம்போரி




1957 இங்கிலாந்து

10ஆவது உலக ஜம்போரி




1959 பிலிப்பைன்ஸ்

11ஆவது உலக ஜம்போரி



1963 கிரேக்கம்

12ஆவது உலக ஜம்போரி




1967 அமெரிக்கா

13ஆவது உலக ஜம்போரி




1971 ஜப்பான்

14ஆவது உலக ஜம்போரி




1975 நோர்வே

15ஆவது உலக ஜம்போரி



1983 கெனடா

16ஆவது உலக ஜம்போரி




1988 அவுஸ்திரேலியா

17ஆவது உலக ஜம்போரி




1990 கொரியா

18ஆவது உலக ஜம்போரி




1995 நெதர்லாந்து

19ஆவது உலக ஜம்போரி




1999 சிலி

20ஆவது உலக ஜம்போரி




2003 தாய்லாந்து

21ஆவது உலக ஜம்போரி



2007 இங்கிலாந்து

22ஆவது உலக ஜம்போரி





2011 சுவீடன்

# நோயாளிகளுக்கான அவசரகால உதவிக் கட்டில் அமைப்போம்!

விபத்துக்களின்போது, பாதிப்படையும் நோயாளிகளைக் காவிச் செல்வதற்கு பொருத்தமான கட்டில் ஒன்றினை தயாரித்துக்கொள்ளும் முறையினை அனைவரும் அறிந்திருப்பது அவசியமாகும். அதற்கு உபயோகமான சில வழிமுறைகள் இங்கு காட்டப்பட்டுள்ளன.

### படுக்கை விரிப்பினால் தயாரிக்கப்படும் அவசர உதவிக் கட்டில்

விபத்து நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கக்கூடிய பலம்பொருந்திய நீளமான மரத்தண்டுகள் இரண்டையும், உறுதியான கட்டில் விரிப்போ அல்லது உறுதியான கென்வஸ் விரிப்பொன்றையோ கொண்டு அவசரக் கட்டில் ஒன்றை அமைக்க முடியும். இந்த முறையில்



அமைக்கப்படும் அவசரக் கட்டில்கள் பலம் வாய்ந்ததாக இருக்கும். இதனை அமைப்பதற்கு மிகவும் குறைந்த நேரமே செலவாகும். கீழ் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, அவசரகால கட்டில் ஒன்றை அமைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு அவசரக் கட்டிலை தயாரித்தவுடன் நோயாளியை இந்த கட்டிலில் வைத்து சிகிச்சைக்காக கொண்டு செல்ல முடியும்.




குறிப்பு: அவசரக் கட்டிலுக்கான உறுதியான விரிப்புத் துணியை தெரிவு செய்யும்போதும், அதனை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சரியான முறையில் வளைவு வடிவில் பொருத்துவதற்கும் முதலுதவியாளர்கள் கூடிய கவனத்தை செலுத்த வேண்டும்.

### கைப்பகுதி குட்டையாக இருக்கும் இரண்டு சட்டைகளிலான அவசர உதவிக் கட்டில்

நீங்கள் சாரணர் சீருடையில் இருக்கும்போது, அல்லது பாடசாலை சீருடையில் இருக்கும்போது, இவ்வாறான அவசர உதவிக் கட்டில் ஒன்றினை துரிதமாக உருவாக்கிக் கொள்ள முடியும். ஒன்றுக்கொன்று சமமான கைப்பகுதி குட்டையாக இருக்கும் சட்டைகள் இரண்டும் பலமான மரப் பலகைத் துண்டுகள் இரண்டும் இதற்குப் போதுமானதாகும். [illegible]மாக இருக்கும்.

**அவசர உதவிக் கட்டிலினை தயாரித்தல்:**

படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சட்டைகள் இரண்டின் கைப்பகுதிகளுக்கு இடையில் மரத்துண்டுகளைப் புகுத்தி அதன்பின் சட்டையின் பொத்தான்களைப் பொருத்திக்



கொள்ள வேண்டும். துரிதமாக உருவாக்கப்படும் இந்த அவசர உதவிக் கட்டிலுக்கு புதிய சட்டைகளைப் பயன்படுத்த முதலுதவியாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது கட்டிலின் பலத்துக்கு உதவும்.

**கயிற்றின் உதவியுடன் அவசர உதவிக் கட்டிலினை உருவாக்குதல்:**

உயரத்தில் இருந்து விழாமல் நோய்வாய்ப்பட்டுள்ள ஒரு நோயாளியை காவிச் செல்ல இந்த கட்டில் பொருத்தமாக இருக்கின்றது. நீண்ட கயிற்றினை படத்தில் உள்ளவாறு தரையில் தொங்க விட்டு முடிச்சினை இடுங்கள். முடிச்சு ஒன்றினை ஒன்று வழுக்கிச் செல்லக் கூடாது. நோயாளியினை கயிறு கொண்ட




கட்டிலின் மீது வைத்து முதலுதவியாளர்கள் மூவரின் உதவியுடன் கொண்டு செல்ல வேண்டும். நோயாளியின் தலை, முதுகுத்தண்டு, கால்கள் என்பனவற்றை அசைக்காமல் உறுதியாக காவிச் செல்ல வேண்டும்.

### ஈட்டித்தடியின் உதவியுடன் அவசர உதவிக் கட்டிலினை உருவாக்குதல்

மேற்கூறப்பட்ட அவசர உதவிக் கட்டில்களைவிட, மிகவும் பலம் பொருந்திய இந்த கட்டிலினை உருவாக்குவதற்கு 5 அடி நீளமான ஈட்டித்தடிகள் இரண்டு, 2 அடி உயரமான பலகைத் துண்டுகள் இரண்டு மற்றும் பருமனான பெராகோட் என்பனவற்றினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அவசர உதவிக் கட்டிலினை உருவாக்குதல்:**

படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பலகை வரையில் உள்ள ஈட்டிகளை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்து தொடர்பு படுத்திக்கொள்ள வேண்டும். அதன்பின்பு படத்தில் காட்



டப்பட்டுள்ள முடிச்சினைக் கொண்டு பெராகோட் வலையில் இங்குள்ளவாறு ஈட்டியின்மீது முடிச்சினை இடுதல் வேண்டும்.

**முதலுதவியாளரின் தீவிர அவதானம் தேவை:**

காயங்களுக்குள்ளானவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது முதலுதவியாளர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசர உதவி வாகனத்தினை அழைத்து அதில் உள்ள நவீன வசதிகள் கொண்ட கட்டிலில் வைத்து நோயாளியை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

வாகன உதவியினையோ, கட்டிலினையோ பெற முடியாத சந்தர்ப்பத்தில் 7 அடி உயரம் மற்றும் ஒரு அடி அகலம் கொண்ட தட்டையான பலம்வாய்ந்த பலகை ஒன்றின்மீது நோயாளியை குப்புறப்படுக்க வைக்க வேண்டும். நெஞ்சு, தொடைப்பகுதி, முழங்கால் மற்றும் கால் பாதங்கள் பலகையில் நன்கு பதியும் படி காயக்கட்டினால் சுற்றி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 164

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | 3 | |
| | ■ | 4 | | | ■ |
| 5 | | | ■ | ■ | 6 |
| | ■ | 7 | 8 | ■ | |
| ■ | 9 | | | | ■ |
| 10 | | ■ | | 11 | |

### மேலிருந்து கீழ்

01. உலோபி.
02. ஆறு.
03. மான் வகைக்குரியது.
04. நாம் இவர்களுக்கும் மரியாதை செய்ய வேண்டும்.
06. பலாப்பிஞ்சு.
08. இங்கிருந்தும் நீர் பெறலாம்.
09. திறை.
11. 'கற்பகதரு' என்று சிறப்பித்துக் கூறப்படுவதுண்டு. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. விழி.
02. 'நம்முடைய' என்றும் பொருள்படும்.
04. மரவகையொன்று.
05. சேறு.
07. யோகத்தின்மூலம் அசாதாரண சக்தியைப் பெற்றவர்.
09. நேரில் பார்ப்பது போன்ற உணர்வைத் தரும் விவரிப்பு.
10. பாம்புக்கு எதிரியாக இதனைக் குறிப்பிடுவர்.
11. தானிய வகையொன்று. (குழம்பியுள்ளது)


குறுக்கெழுத்துப் போட்டி இல.163 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | ச் | 2 ச | ர | வு | ■ |
| த் | ■ | ர் | ■ | ■ | 3 மு |
| 4 தி | ர | வ | ம் | ■ | டி |
| ய | ■ | ம் | ■ | 5 பு | வீ |
| 6 வா | ய் | ■ | 7 அ | ன | லி |
| ன் | ■ | அ | 8 ணி | ல் | ■ |

## A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## நேரம் குறித்துக் காட்டுக









## பொருத்தமான படங்களுடன் இணையுங்கள்

| | |
|---|---|
| toothbrush | coral |
| violin | stork |
| mammoth | pickle |
| finch | flood |
| pirate | artichoke |
| papaya | footprint |
| playground | firestation |
| helicopter | jaguar |


## அறிவுக்கு விருந்து (11.11.2015) விடைகள்

| | |
|---|---|
| spider | purple |
| ear | bear |
| ball | train |
| badge | lamp |
| hand | parrot |
| whale | table |
| bed | ant |
| run | leaf |




இறங்குவரிசைப்படி இலக்கமிடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா' த.பெ.என் 2037 கொழும்பு



தெபத்கமவைச் சேர்ந்த சண்முகநாதன்-சுபாசினி தம்பதியரின் செல்வப் புதல்வன் யதுர்சன், தனது நான்காவது பிறந்தநாளை 26.11.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



திருகோணமலை விகாரை வீதியைச் சேர்ந்த கமலநாதன்-சஞ்சலா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸஷ்மிதா, தனது பத்தாவது பிறந்தநாளை 27.11.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



திருகோணமலை, அல்லை நகர் தோப்பூரைச் சேர்ந்த முஹம்மட் லரீப்-சிபானா தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்மார் அஹம்மட், தனது ஏழாவது பிறந்தநாளை 20.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



திஹாரியைச் சேர்ந்த முஸம்மில்-நிசா தம்பதியரின் செல்வப் புதல்வி மிஸ்கா முனா, தனது ஏழாவது பிறந்தநாளை 18.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



நிந்தவூரைச் சேர்ந்த அப்துல் ஹலீம் - பாத்திமா றியாஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹாதீம் அகமத், தனது இரண்டாவது பிறந்தநாளை 17.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: அலீம்)



வரகாபொலை நாங்கல்லையைச் சேர்ந்த சின்ஸார்-றுஸ்மினா தம்பதியரின் செல்வப் புதல்வி ஸீனத் மின்ஹா, தனது மூன்றாவது பிறந்தநாளை 17.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



களுதாவளை 04, களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த நற்குணம்-கமலதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன் நிஜிரிதன், தனது பதினான்காவது பிறந்தநாளை 15.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அண்மையில் காத்தான்குடி ஸாஹிரா விஷேட தேவையுடையோர் பாடசாலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம்.ஜாபிர் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் விசேட தேவையுடைய மாணவர்களது கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன.

(தகவல்: பர்ஹான்)






அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.என் 2037
கொழும்பு



எஸ்.சுரேன்குமார்,
பாதினாவெல மு.வித்., பொறகஸ்.



எம்.சமீர்,
மனாருல் உ.ம.ம.வித்., அநுராதபுரம்.



ஐ.ராஜ்குமார்,
தெஹி/நூரி.த.வித்.,
நூரி.



இ.சரணிக்கா,
திருஞானசம்பந்தர் வித்., வவுனியா.



அலெக்சிகா அல்பேர்ட்,
இளவாலை கொன்வன்ற் ம.வித்.,
இளவாலை.



எம்.ஹுஸ்னா,
ஸாஹிரா ம.வித்., குருவிட்ட

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எஸ்.டெப்னியா.
**புள்ளிகள்:** 175.
**பாடசாலை:** நு/ ஹைலன்ஸ் கல்லூரி, ஹட்டன்.



**பெயர்:** எல்.ஹசீஃப்.
**புள்ளிகள்:** 164.
**பாடசாலை:** கிரி/ அல்-அமீன் மத்திய கல்லூரி, எலபடகம.
**பெற்றோர்:** எம்.லாபீர்- எஃப்.பரீஸா.



**பெயர்:** எஸ்.சிவானுஜா.
**புள்ளிகள்:** 154.
**பாடசாலை:** உடையார்கட்டு அ.த.க.பாடசாலை.



**பெயர்:** டினோஜா கிரேஸ்.
**புள்ளிகள்:** 152.
**பாடசாலை:** பு/ மணல்தீவு றோ.க.த. வித்தியாலயம்.



**பெயர்:** எஃப்.அஸ்கா.
**புள்ளிகள்:** 157.
**பாடசாலை:** அல்-ஹுதா மு.ம.வித்தி., ரமுகந்தன.



**பெயர்:** ரகீப் அப்துல்லா.
**புள்ளிகள்:** 188.
**பாடசாலை:** ஸாஹிரா தேசிய பாடசாலை, மாவனல்லை.



**பெயர்:** ஏ.ஏ.லீனா.
**புள்ளிகள்:** 174.
**பாடசாலை:** நாங்கல்லை முஸ்லிம் ம.வித்., துல்ஹிரிய.



*மாறை/கபுவத்தை அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களான எம்.ருஷ்தி-159 புள்ளிகள் (பெற்றோர்: அர்ஷத்-பிர்தௌஸியா) மற்றும் எம்.ரிஷாத் - 155 புள்ளிகள் (பெற்றோர்: அன்ஸார் - கரீமா) ஆகியோர், தமது பாடசாலை அதிபர் எம்.வாஸில் மற்றும் ஆசிரியர்களான ஏ.பதுருதீன், எம்.ராதி, எம்.நௌஷாத்தீன் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.*


உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* இலங்கையில் 31 கல்வி மாவட்டங்களும் 96 கல்வி வலயங்களும் உள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எத்தனை கல்வி வலயங்கள் உள்ளன?

  12 கல்வி வலயங்கள்




* Spoken English க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் 20 புள்ளிகள் வழங்கும் தீர்மானம் எப்போது முதல் அமுலாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது?

  2015 ஆம் ஆண்டில்





* உலகில் மிகப் பெரிய பாடசாலையென கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ள பாடசாலை எது?

  இந்தியாவின் லக்னோவில் அமைந்துள்ள சிடி மொண்டசூரி



* கனடாவில் 2015 ஆம் ஆண்டு தெரிவான பிரதமர் யார்?

  ஜஸ்ரி டிருடோவ்



* சேர் வூட்ரோலன்ட் என்பவர் எதனால் முக்கியத்துவம் பெற்றுள்ளார்?

  ஓசோன் படலத்தில் ஓட்டை விழுவதைக் கண்டறிந்தமையால் முக்கியத்துவம் பெறுகின்றார்

* D.N.A என்பதன் விரிவாக்கம் என்ன?

  Deoxyribonucleic Acid

* 5-E. கற்பித்தல் முறை எவை?

  i. ஈடுபடல் ii. விளக்குதல் iii. கண்டறிதல் iv. விரிவுபடுத்தல் v. மதிப்பிடல்



* ஒஸ்கர் பிஸ்டோரியன் எத்துறையில் புகழ்பெற்றுள்ளார்?

  2012 பாரா ஒலிம்பிக்கில் தங்கம் குவித்ததால்




* உலகில் ஆகக் கூடிய கைத் தொலைபேசிகளை பயன்படுத்தும் நாடு எது?

  சீனா

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# ஓவியம் வரைவோம்



# அலிபாபாவும் 40 திருடர்களும் 28

கதை, ஓவியம்: வேணு வாரியத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றி பெற...

*வாழ்க்கையில் நாம் அறிந்த விடயங்களை விட அறியாத விடயங்கள் பல உள்ளன. பாடசாலையிலும் சரி பொது வாழ்க்கையிலும் சரி நாம் எதிர்பாராத பல சவால்களையும் புதிய விடயங்களையும் சந்திக்கின்றோம். குறிப்பாக, சவால்களை நாம் நேர் சிந்தனைகளுடன் எதிர்கொள்ள வேண்டும். அத்துடன், கல்வி கற்கும் காலத்தில் கல்வியின் அதிகப்பட்ச பலன்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்மூலம் நாட்டுக்கு நற் பிரஜைகளாகவும் நாம் உருவாக வேண்டும்.*



## பெற்றோர் தொடர்பு இன்றியமையாதது


எமது வாழ்க்கையில் சிறந்த மகத்தான வழிகாட்டிகள் எமது பெற்றோர்களாவர். பிள்ளைகளின் முன்னேற்றமே அவர்களின் ஒரே குறிக்கோளாகும். நீண்டகாலம் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே அவர்கள் எமக்கு ஆலோசனைகளை கூறுகின்றனர். இதனால், அவர்களின் ஆலோசனைகளுக்கு செவி சாய்க்க தவறக் கூடாது.

## பெற்றோர்களுடன் பிரச்சினைகள் வேண்டாம்

பெற்றோர்களுடன் முரண்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றை பேசித் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். சில வேளைகளில் பெற்றோர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். அந்த வகையில், நாம் எதிர்பார்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் உதவியினைப் பெற முடியாது. என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். மௌனித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்காதீர்கள். அதுபற்றி அவர்களுடன் விரிவாகக் கலந்துரையாடுங்கள்.

## பெற்றோர்களின் ஆலோசனைகளை புறந்தள்ளாதீர்கள்

பெற்றோர்களும், வயதில் மூத்தவர்களும் வாழ்க்கையில் எத்தனையோ விடயங்களை பற்றி அனுபவ அறிவினைப் பெற்றிருப்பார்கள். இதனால், அவர்களின் ஆலோசனைகள், வழிகாட்டுதல்களை தவிர்க்கக் கூடாது. பெற்றோர்களை மீறிச் செயற்படவும் கூடாது. அவர்களின் அறிவினையும், ஆலோசனைகளையும் வாழ்க்கையினை வெற்றி கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள முனைய வேண்டும்.



இரவு சாப்பாட்டு மேசையே அனுபவப் பகிர்வு இடமாகும்

## இரவு சாப்பாட்டு மேசையின் முக்கியத்துவம்

அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கு சிறந்த இடம் இரவு சாப்பாட்டு மேசையாகும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இரவு உணவுக்காக அமர்ந்திருக்கும் இந்த இடம் அனுபவங்களை, கருத்துக்களை பகிர்ந்துகொள்ள சிறந்த இடமாக அமையும்.

## ஊடகங்களை சரியான முறையில் கையாளுங்கள்

வானொலியும், தொலைக்காட்சியில் ஒளி- ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் சில சாதாரண வாழ்க்கையில் நிகழும் யதார்த்தமான விடயங்கள் அல்ல. இதனால், ஊடகங்களில் ஒலி-ஒளிபரப்பப்படும் நல்ல விடயங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு மோசமான நிகழ்ச்சிகளைத் தவிர்த்துவிடுங்கள். உங்கள் அன்றாட வேலைகளுக்கு இவற்றை இடையூறுகளாக்கிக் கொள்ள வேண்டாம். முக்கியமான சிறந்த நிகழ்ச்சிகளை பெற்றோரின் கலந்துரையாடலுடன் பார்த்து மகிழுங்கள். வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இடமளிக்காதீர்கள். அவற்றை நமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க நாம் தெரிந்திருக்க வேண்டும்.

## அன்றாட வேலைகளை திட்டமிட்டுக்கொள்ளுங்கள்

அன்றாட வேலைகளை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இதனை முன்தினம் இரவு அல்லது அன்றைய தினத்தின் காலைப் பொழுதில் மேற்கொள்ள முடியும். திட்டமிட்டு செயலாற்றுவதனால் அனைத்து வேலைகளையும் சரிவர நேரத்திற்கு செய்து முடிக்க முடியும்.

## மன ஆரோக்கியம் பற்றியும் சிந்தியுங்கள்

அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் பிரச்சினைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு மன ஆரோக்கியத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு குழு செயற்பாடுகள், தியானம், மனதை இலகுவாக்கும் பயிற்சிகள், மத செயற்பாடுகளில் ஈடுபடல், ஓய்வு எடுத்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

அன்றாடம் சமயம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஏதாவது விளையாட்டுக்களில் ஈடுபடுதல் மற்றும் பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுதல் என்பவற்றின் மூலம் எமது மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள முடியும். எமது மனம் குழப்பமடையும் போது சூழலில் உள்ள பசுமையான மரத்தினை ஒரு சில நிமிடங்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதன்மூலம் மனதை இயல்படையச் செய்ய முடியும்.

## உடற்பயிற்சி செய்யுங்கள்

உடற்பயிற்சி செய்யும்போது எமது மூளையில் சுரக்கும் என்டோபின் என்ற சுரப்பு மனதுக்கு மகிழ்ச்சியினை தரும். அத்துடன், உடற்பயிற்சியினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதனால், வாரத்திற்கு 3 தடவைகள் அரை மணித்தியாலமாவது உடற்பயிற்சிகளில் ஈடுபடுங்கள்.

* தசைகளில் மற்றும் மூட்டுகளில் நெகிழ்வுத் தன்மையினை ஏற்படுத்தும்.

**உடற்பயிற்சியின் நன்மைகள்:**

* மன அழுத்தத்தைக் குறைக்கும்
* சுகமான உறக்கம் கிடைக்கும்
* பார்வை ஆற்றல் அதிகரிக்கும்
* இடுப்புவலி மற்றும் ஒஸ்டியோபுரோசிஸ் நோயின் தீவிரத்தினைக் குறைக்கும்.




அன்றாட வேலைகளுக்கு கால அட்டவணை

இதனை அன்றாட வேலைகளுக்கு பாதிப்பாக்கிக் கொள்ளாதீர்கள்



உடற்பயிற்சி செய்வதால் அதிகமான நன்மைகள் உள்ளன





தியானத்தில் ஈடுபடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்






# சிறுத்தை




* உயிர் அச்சுறுத்தல்: வேட்டையாடுதல், காடழிப்பினால் ஏற்படும் வாழ்விட இழப்பு போன்ற காரணங்களால் இவற்றின் பரம்பல் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

* ஆங்கிலப் பெயர்: சிறுத்தையின் ஆங்கிலப் பெயர் Leopard என்பதாகும்.

* குடும்பம்: இது பெரிய பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் சிறிய இனம் ஆகும்.

* இரைகள்: ஊர்வனங்கள், மான்கள், குரங்குகள், பறவைகள், சிறிய பிராணிகள்.

* உடலமைப்பு: பெரிய பூனைக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களான சிங்கம், புலி, ஜக்குவார் போன்றவற்றுடன் ஒப்பிடுகையில், சிறுத்தை சிறிய கால்களையும் பெரிய மண்டையோட்டுடன்கூடிய நீண்ட உடலையும் கொண்டிருக்கும். உடலில் புள்ளிகள் காணப்படும்.

* ஆற்றல்கள்: மணிக்கு 58 கி.மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. மரங்களில் ஏறும் ஆற்றல் கொண்டது. மறைந்திருந்தும் வேகமாக ஓடியும் இரைகளை வேட்டையாடும் தன்மையுடையது.

* அதிகமாகக் காணக்கூடிய இடங்கள்: கிழக்கு ஆசியா, தெற்காசியா மற்றும் ஆபிரிக்கப் பகுதிகளில் சிறுத்தைகள் அதிகமாக வாழ்கின்றன. எனினும், தற்போது அவற்றின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இன்றளவில் இவை உப சகாரா பகுதிகளிலேயே பிரதானமாகக் காணப்படுகின்றன. தவிர, இந்தோனேஷியா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலேசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் சிறியளவில் காணப்படுகின்றன.

# eatsa iPad உணவகம்





அமெரிக்காவின் San Francisco நகரில் அண்மையில் 'eatsa' என்ற பெயரில் iPad உணவகமொன்று திறக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த உணவகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு உணவுகளை எடுத்து வர ஊழியர்கள் இருக்கமாட்டார்கள். மாறாக, வாடிக்கையாளர்கள் தமது கைத்தொலைபேசிகளினூடாகவோ அல்லது அங்கு பொருத்தப்பட்டுள்ள iPad களினூடாகவோ தமக்குத் தேவையான உணவுகளைக் குறிப்பிட வேண்டும். அப்போது அங்குள்ள திரையில் அந்த உணவிலுள்ள கலோரியின் அளவு, விலை போன்ற தரவுகள் காண்பிக்கப்படும். அவற்றில் எமக்குத் தேவையானதை தெரிவுசெய்தால், அதற்குரிய பில் அங்கு தோன்றும். பின்னர் ok பட்டனை அழுத்த வேண்டும்.

சிறிது நேரத்தில் எமக்குரிய உணவு தயாரானவுடன் அங்கிருக்கும் திரையில் எமது பெயர் தெரியும். திரையருகே சென்று அதில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இரண்டு தடவைகள் தட்டவேண்டும். அப்போது சட்டென்று திரை அகன்று, நாம் கேட்ட உணவு அங்கு இருக்கும். அப்புறம் என்ன... அதனை எடுத்து வந்து சாப்பிட வேண்டியதுதான்!!

# விளக்கு எரிய உப்புநீர் போதுமானது...!



'மின்சாரம்' என்பது இன்றைய உலகில் அத்தியாவசியமான ஒரு விடயமாக மாறிவிட்டது. ஆனால், உலக நாடுகளில் இன்றும்கூட மின்சார வசதி இல்லாத பல பகுதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, பிலிப்பைன்ஸ் நாட்டின் SALT எனும் மாற்று எரிபொருள் நிறுவனமொன்று எளிய முறையில் இயங்கக்கூடிய 'SALT விளக்கினை' தயாரித்து அறிமுகம் செய்துள்ளது.

இந்த விளக்கை எரியச் செய்வதற்கு மண்ணெண்ணெய்யோ, மின்சாரமோ தேவைப்படாது. மாறாக, கொஞ்சம் உப்பும் நீரும் போதுமானது. அதன்படி, சோல்ட் விளக்கில், ஒரு கோப்பை நீரை ஊற்றி, இரண்டு தேக்கரண்டி உப்பைப் போட்டால் போதும். அல்லது கடல் நீரைக்கூட நிரப்பலாம். பின்னர் அதிலுள்ள மின்கல பொறிமுறையில் மின்சாரம் உற்பத்தியாகி, அந்த விளக்கு பிரகாசமாக எரியும். விளக்கில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் கைப்பேசியைக்கூட சார்ஜ் செய்யலாம். தினமும் எட்டு மணிநேரம், ஆறு மாதங்களுக்கு இதனைப் பயன்படுத்தலாம் எனக் கூறப்படுகின்றது. அதன் பின்னர், மின்கலத்தின் இரு உலோகத் தண்டுகளை மாற்ற வேண்டி ஏற்படும். 2016 ஆம் ஆண்டளவில் இதனை சந்தைப்படுத்த SALT நிறுவனத்தினர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, நொவெம்பர் 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 25, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org